## மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

| | | |
|---|---|---|
| செயன்முறைத் தொழிநுட்பத் திறன்கள்<br>Practical Technical Skills | தரம் : 09<br>Grade : 09 | இரண்டு மணித்தியாளம்<br>Two Hours |

### பகுதி - I

**மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

1) நகரங்களிலும் நகரத்தை அண்டிய பிரதேசங்களிலும் வசிப்போர் எவ்வகையிலான தொழிநுட்ப உத்திகளைக் கையாண்டு பயிர்செய்தல் சிறப்பானது?

1) சேனைப் பயிர்ச்செய்கை
2) பாத்தி முறையிலான பயிர்ச்செய்கை
3) நிலைக்குத்து வெளி பயிர்ச்செய்கை
4) குறுங்காலப் பயிர்ச்செய்கை

2) ஆணிகளை அறைதல், கழற்றுதல் போன்ற கருமங்களை முறையாக மேற்கொள்ள உதவுவது.

1) குறடு 2) அரம் 3) கவர் சுத்தியல் 4) சாவணம்

3) நம் முன்னோர்கள் பீடைகளைக் கட்டுப்படுத்த பல்வேறு உத்திகளைக் கையாண்டனர். அவ்வாறானவற்றில் ஒன்றே படத்தில் காட்டப்பட்டுள்ளது. அது என்ன உத்தி?




1) ஒளிப்பொறி 2) பிலாப்பசை பொறி
3) பெரோமன்கண்ணி 4) டமத்தியோன் விசிறல்

4) எரிவாயு அடுப்பின் இணைப்பு குழாய்கள் எத்தனை வருடத்திற்கு ஒரு முறையேனும் மாற்றுதல் வேண்டும்?


1) 3 வருடம் 2) 2 வருடம் 3) 1 வருடம் 4) 5 வருடம்

5) படத்தில் காட்டப்பட்ட அலகின் செயற்பாடு.



1) உணவுப் பதார்த்தங்களை நுரைவரும் வரை அடித்தல்
2) சட்னிக்கான பதார்த்தங்களைத் துகள்களாக்குதல்
3) உலர்வான பதார்த்தங்களை அரைத்தல்
4) ஈரத்தன்மையான பதார்த்தங்களை அரைத்தல்

6) படத்தில் காட்டப்பட்ட எரிவாயு அடுப்பின் பகுதி எது?



1) சுவாலை வழங்கி 2) தீப்பொறி பிறப்பாக்கி
3) தொடக்க குமிழ் 4) மேற்றட்டு



kalvi.lk

7) இலங்கையில் கடந்த 01.09.2017 இன் பின்னர் தடைசெய்யப்பட்ட உற்பத்தி, பாவனைப் பொருள் எது?

1) குளிர்சாதனப் பெட்டி 2) பொலித்தீன் பாவனை 3) புகையிலை உற்பத்தி

4) கோப்பிப் பயிர்ச் செய்கை

8) இன்று உலகளாவிய ரீதியில் கழிவுப் பொருட்களை முகாமைத்துவம் செய்வதற்குப் பயன்படும் எண்ணக்கரு வடிவம்.

1) 2R 2) 3R 3) 4R 4) 5R

9) உடல் வளர்ச்சிக்கு அவசியமான போசணைக் கூறு எது?

1) மாப்பொருள் 2) கனியுப்பு 3) புரதம் 4) விற்றமின் C

10) சிற்றளவு வணிகர்கள் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டிய நிறுவனங்கள் எவை?

A - தொழிநுட்ப நிறுவனம்

B - இலங்கை கைவினைத் தொழிற்சபை

C - நகரசபை - பிரதேச சபை

D - வங்கிகள் - நிதிநிறுவனங்கள்

E - பிரதேச செயலகம்

1) A, C, D 2) D, E 3) A, E 4) A, B, C, D, E

11) மீன், மிளகாய், திராட்சைச் சாறு, சின்ன வெங்காயம், வாழை, பனை என்பன அதிகளவில் காணப்படும் மாகாணம் எது?

1) வடமத்திய மாகாணம் 2) வடமேல் மாகாணம் 3) வடமாகாணம்

4) கிழக்கு மாகாணம்

12) உணவுக் கூம்பகத்தின் நுனியில் காணப்படும் உணவு வகை.

1) பழங்கள், மரக்கறிகள் 2) தானியம், கிழங்கு வகை 3) சோறு, பிட்டு, தானியவகை

4) எண்ணெய், சீஸ், சீனி, பட்டர்

13) எமது நாட்டில் அதிகளவு காணப்படும் வணிகர்கள்.

1) சிற்றளவு வணிகர் 2) நடுத்தர அளவு வணிகர் 3) மத்தியதர வணிகர்

4) பாரிய அளவு வணிகர்

14) மண்ணின் வளத்தை அதிகரிக்க அல்லது சீராகப் பேண மேற்கொள்ளும் பயிர்ச்செய்கை முறை.


1) சுழற்சி முறையிலான பயிர்ச்செய்கை

2) அல்பேட் கரைசலில் - மண் இன்றிய பயிர்ச்செய்கை

3) தொங்கு சாடி பயிர்ச்செய்கை

4) சேனைப் பயிர்ச்செய்கை

15)



தூசு துடைப்பான் தயாரிப்பதற்குப் பயன்படும் உபகரணம் ஒன்று படத்தில் காட்டப்பட்டுள்ளது. அது எது?

1) கைவாள்

2) மின் துறப்பணம்

3) சுத்தியல்

4) கலக்கும் இயந்திரம்



kalvi.lk

16) நாம் கூட்டெரு தயாரிக்கும் போது சிறிதளவு பழைய கூட்டெருவைச் சேர்த்துக் கொள்கின்றோம். இதன் நோக்கம் என்ன?

1) சம்பிரதாய பூர்வ செயற்பாடு 2) நுண்ணங்கி தொழிற்பாட்டை அதிகரிக்க

3) கூட்டெரு கறுப்பு நிறமாக மாற வேண்டும் 4) நீரையும், வெப்பத்தையும் தக்க வைக்க

17) இலங்கையில் தற்போது எஞ்சியுள்ள காடுகள் எத்தனை சதவீதமாக உள்ளது?

1) 32% 2) 22% 3) 42% 4) 2%

18) நாற்றுச் சாடியின் அடியில் துவாரம் இடப்படுவதன் பிரதான நோக்கம்.

1) வேர்விடச் செய்தல் 2) அமுக்கத்தைக் குறைக்க 3) மேலதிக நீரை வெளியேற்ற

4) மண்புழு வெளியேற

19) பாலைத் தயிராக உறையச் செய்யும் பற்றீரியா.

1) செப்ரரிசீமியா 2) கொணரா 3) லக்ரோபசிலஸ் 4) அந்தரெக்ஸ்

20) இயற்கை மீளக் காடுகள் வளரும் செயன்முறையில் பெருங்காடு எனக் குறிப்படுபவையின் வருடங்கள் எத்தனை?

1) 0 - 10 வருடம் 2) 10 - 25 வருடம் 3) 25 - 100 வருடம் 4) 100 வருடத்திற்கு மேல்

(20 x 1 = 20)

## பகுதி II

* **முதலாம் வினாவிற்கும் ஏனைய விரும்பிய இரண்டு வினாக்களுக்கும் விடை தருக. (மொத்தம் மூன்று வினாக்களுக்கு விடையளித்தல் அவசியம்)**

* **பகுதி II வினாப்பத்திரத்துக்கு விடை தருகின்ற போது கூடியளவு படவிளக்கம் எதிர்பார்க்கப் படுகிறது.**

01) 1) செயன்முறைத் தொழிநுட்பத்திறன்கள் பாடத்தில் நீங்கள் இம்முறை செய்த செயன்முறை செயற்பாடு ஒன்று தருக? (1 புள்ளி)

2) நீங்கள் மேற்கொண்ட செயற்பாட்டிற்குத் தேவைப்பட்ட கருவிகள் / உபகரணங்கள் மற்றும் தேவைப்பட்ட ஏனைய பொருட்கள் எவை? (3 புள்ளிகள்)

3) நீங்கள் செயற்பாடு மேற்கொண்ட போது எதிர்கொண்ட சவால்கள் எவை? (3 புள்ளிகள்)

4) செயற்பாட்டில் எதிர்கொண்ட சவால்களை எதிர்கொள்ள ஆலோசனை / உதவி செய்தவர்கள் யார்? (1 புள்ளி)

4) செயற்பாட்டை வெற்றிகரமாக செய்து முடித்த பின்னர் உங்கள் மனதில் தோன்றிய எண்ணம் என்ன? (2 புள்ளிகள்)

02) 1) விவசாய நடவடிக்கைகளுடன் தொடர்பான பிரச்சினைகள் நான்கு தருக.

2) மட்டுப்படுத்தப்பட்ட இடப்பரப்பில் இருந்து உச்சப் பயனைப் பெறுவதற்கான தொழிநுட்ப முறை பயிர்ச்செய்கைகள் நான்கு தருக.

3) தாவரங்களிலிருந்து கிடைக்கும் பயன்கள் ஆறு தருக.

4) மண்ணுடன் சேதனப் பசளை சேர்வதன் மூலம் கிடைக்கும் பயிர்கள் 4 தருக. (10 புள்ளிகள்)



kalvi.lk

03) 1) தவறான உணவுப் பழக்கங்கள் மூலம் உருவாகும் நோய்கள் நான்கு தருக.


2) உணவு தயாரிப்பவர் ஏனையோரது ஆரோக்கியத்துக்காக தன்னைத் தயார்ப்படுத்த வேண்டிய விடயங்கள் எவை?

3) பொதியிடலின் மூலம் பெறப்படும் அனுகூலங்கள் எவை?

4) தயிர் தயாரித்துக் கொள்ளும் முறையை ஒழுங்குபடுத்தி முறைப்படி குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

04)




1) படத்தில் காட்டப்பட்ட மின்சக்தியால் இயங்கும் கலக்கும்/ அரைக்கும் உபகரணத்தின் பிரதான பாகங்களைக் குறித்துக் காட்டுக.

2) விவசாயக் கருமங்களிற்குப் பயன்படுத்தப்படும் சக்தி வகைகள் நான்கு தருக.

3) சஞ்சீவன் நித்திரைவிட்டு எழுந்து சமையலறை செல்லும் போது சமையலறை எரிவாயு அடுப்பில் இருந்து வாயு கசிவு ஏற்படுவதை உணர்ந்தான். உடனடியாக சஞ்சீவன் செய்ய வேண்டிய விடயம் மூன்றினையும் செய்யக்கூடாத விடயம் மூன்றினையும் குறிப்பிடுக.

4) எரிவாயு சிலிண்டரில் காணப்படும் வாயு எது?

(10 புள்ளிகள்)

05) 1) வணிகர்களைப் பிரதானமாக எத்தனை வகையாகப் பிரிக்கலாம்? அவர்கள் யார்?

2) நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதில் சிறியளவிலான வணிகர்களின் முக்கியத்துவம் என்ன?

3) உமது பிரதேசத்தில் காணப்படும் பழுதுபார்த்தல் சேவை வணிக அமைப்பு நான்கு தருக.

(10 புள்ளிகள்)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**



*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.*

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457